**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

**OS No. 98/2023 நாள் 11.09.2024**

**வாசா.1 ராஜகாந்தன் த/பெ.தம்பிகண்ணு**

**குறுக்குவிசாரணை**

பிரதிவாதி மதிமாறனுக்கும் எனககும்1992 18 வயது முதல் கல்லூரியில் இருந்து பழக்கம். நான் விவசாய வேலை செய்கிறேன். நான் சண்முகா பொறியியல் கல்லூரியில் பொறியியல் படிப்பு படித்தேன். பிரதிவாதிக்கு எனது வீட்டில் வைத்து பணத்தை கொடுத்தேன். பணம் கொடுக்கும் போது எனது உறவினர் செல்வராசன் மற்றும் விவேக் ஆகியோர் உடனிருந்தார்கள். பணத்தை 30 500 ரூபாய் கட்டுகளாக கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும் போது இந்த 3 நபர்களை தவிர வேறு யாரும் இல்லை. பிரதிவாதி வீடு கட்டிக்கொண்டிருந்தார். அதற்கான செலவிற்கு என்னிடம் பணம் கேட்டார். பணம் கொடுக்கும் 03.8.2020 வரை அவர் எனக்கு நன்பராக இருந்தார். வாசாஆ-1 புரோநோட்டில் வட்டிவீதம் 2 சதவீதம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 24 சதவீதம் என்று வட்டி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2 வட்டி என்பதை தான் 24 சதவீதம் என்று சொன்னேன். வாசாஆ.1ல் எழுதியுள்ள தொடக்கத்தில் வருடம் என்று தொடங்கி பெற்றுக்கொள்வேன் வரை ஒரு கையெழுத்து என்றால் சரிதான். செல்வராசன் என்பவர் எழுதினார். பிரதிவாதியின் கையெழுத்து முத்திரையில் உள்ளதுக்கும் மற்ற எழுத்துக்களுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் உள்ளது. அது பிரதிவாதியின் கையெழுத்து தான். சாட்சி விவேக் என்பவரின் எழுத்து மையிலும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். விவேக்கும் செல்வராசும் எனது தூரத்து உறவினர்கள். பிரதிவாதிக்கு உடல் ரீதியாக பதிப்பு இருக்கிறது என்று தெரியுமா என்றால் சமீபத்தில் கேள்விப்பட்டேன். அவருக்கு என்ன நடந்தது என்று தெரியாது. வாசாஆ-5 பிரதிவாதியின் வீட்டுபத்திரத்தில் 12.8.2024 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். கடன் வாங்கிய தேதியில் இந்த பத்திரங்களை கொடுத்ததாக சொல்லியிருந்தால் அந்த தேதியிட்ட ஆவணத்தை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. கடன் கொடுத்த அன்று பிரதிவாதி என்னிடம் பத்திரத்தின் நகலை கொடுத்தார். நீதிமன்றத்திற்கு சான்றிட்ட நகலை தாக்கல் செய்யவேண்டும் என்பதால் சமீபத்தில் நீதிமன்ற உத்தரவுடன் அதை பெற்று தாக்கல் செய்தேன். ஒருவருக்கு ரூ.2,00,000/-க்கு மேல் ரொக்கமாக பணம் கொடுக்கக்கூடாது என்று விதி இருப்பது தெரியுமா என்றால் தெரியாது. கடன் கொடுத்தபிறகு பிரதிவாதியிடம் தொலைபேசியிலும் நேரிலும் பணம் திருப்பி கொடுக்குமாறி அடிக்கடி பலதடவை கேட்டேன். 5.3.2023 அன்று நானும் எனது நன்பர் விவேக் என்பவரும் பிரதிவாதியின் வீட்டிற்கு போய் அவரையும் அவரது மனைவியையும் தகாத வார்த்தையால் திட்டியது சம்பந்தமாக புகார் கொடுத்து அதுசம்பந்தமாக காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் அழைத்தார்கள். அந்த விசாரணையில் நான் ரூ.5,00,000 கொடுத்ததாக சொல்லி எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. புகாருக்கு பிறகு போனில்

பிரதிவாதியிடம் என் பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் விசாரணைக்கு பிறகு பிரதிவாதியிடம் பேசக்கூடாது என்றும் சட்டப்பூர்வமான நடவடிக்கை தான் எடுக்கவேண்டும் என்று சொல்லியதால் நான் அவரிடம் அதற்குபிறகு பேசவில்லை. பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாசாஆ.1ல் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்று Expert opinion க்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. நானும் பிரதிவாதியும் நெருங்கிய நன்பர்கள் என்றும் அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரிடமிருந்து பணம் மற்றும் வீட்டை கைப்பற்றிவிடலாம் என்று பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வசதிபடைத்தவர் என்றால் உண்மை. ரூ.15,00,000க்கு மேல் பணம் கொடுக்கும் போது காசோலையின் மூலமாகவோ வரையோலையின் மூலமாகதான் கொடுக்கவேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியும். நன்பர் என்பதால் கொடுத்தேன். வாசாஆ.-6 வில்லங்க சான்றிதழை 05.4.2023 மற்றும் சமீபத்தில் போட்டு பார்த்தேன். பிரதிவாதி என்னிடமிருந்து எந்தவிதமான கடனும் வாங்கவில்லை என்றும் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் தவறு.